

# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லா இலாஹ இல்லல்லாஹு
முஹம்மதுர் றஸூலுல்லாஹி"

புத். 1. { அறப்ஹு 1312 ஜமாதுலஆகிர் மீ 16 உ செவ். ம. / இங்கிலிஷ் ஹு 1894 டிசம்பர் மீ 14 உ வெ. கி } இல. 21.

## மெய்ஞ்ஞான விளக்கம்.

[சென்ற 20 மிலக்கம் 165 பக்கத் தொடர்ச்சி.]

உலகத்தில் மனுப்புத்திரர்களாய் பிறந்தவர்கள் தங்கடங்கள் விருப்பத்தைத் தொடர்ந்து நடந்து கெட்டுப் போகாமல், காலத்துக்குக் காலம் ஒவ்வொரு நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள். அந்த நபிமார்களுக்கெல்லாம் நாயகராக எங்கள் இரட்சகர் முகம்மது நபி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் அனுப்பப்பட்டார்கள் அவர்களுக்குப்பிறகு இவ்வுலகில் நபிகள் வரப்போகிறதில்லை முன்னுள்ள சிறிய நபிகளைப்போலவே நபிகள் நாயகத்தின் உம்மத்திலுள்ள உலமாக்களைச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வுலமாக்களாயுள்ளவர்கள் தகுந்த இல்மென்னும் அறிவையுடையவர்கள், அவர்களின் அறிவினால் முஸ்லிம்கள் வழிநடாத்தப்படுவார்கள். அந்த உலமாக்களிலுள்ளவர்களில் ஒரு பிரிவார் "இமாம்" கள் என்றும் மற்றொரு பிரிவார் "செய்கு" மார்கள் என்றும் அழைக்கப் படுகிறார்கள். இவ்விரு

W

இறந்தவரின் விரிவைப்பற்றி இங்கே பேசப்புகின் இடம்பெறாது. ஆதலின், சென்ற பத்திரிகையில் நாம் கூறிய கோட்டாற்றுச் சாயிபுமார் இவ்வுலமாக்கள் என்னும் பிரிவில் அகப்பட்டவர்களா என்று பார்ப்போம். அவர்கள் * a ஆலிமுமல்ல, b ஹாபிளுமல்ல, c பாஹிமுமல்ல, d ஆக்கிலுமல்ல, e ஆரிபுமல்ல. அறபு இலக்கண இலக்கியங்களில் இரண்டொரு புத்தகங்களைப் படித்தவர்களை ஆலிம் என்று இவ்வூரில் மரியாதைக்காக அழைக்கிறார்கள். அதுவும் சரியல்ல. அறபியிலுள்ள பதினான்கு கல்விப்பாகங்களையுங் கற்று "அல்லாமத்" என்னும் பட்டம் பெறாதவர் செய்கு என்றுபேர் வைத்து உபதேசங் கொடுக்கிறது பெரும் பிசகான காரியமே. கோட்டாறு என்ற ஊரில் இதனாலே பெரும் கலகங்கள் விளைந்து தற்காலம் கட்சிப்பிரிவுகளுண்டாயிருக்கிறது. இவர்கள் இவ்வுலகத்துக்கு நல்ல செய்குமார்கள். மறுமைக்கோ இவர்களின் கோலங்கள் பலியாது பலியாது நிச்சயம். அறபுக்கல்வியை அறியாத ஒரு மனிதன் அதிலுள்ள ஞான சூட்சியங்களை என்னென்றுதான் அறியப்போகிறான். இந்தக் கோட்டாற்று சாயிபுமார்களையாவது வலைத்தூர் சாயிபுமாரையாவது யாராவது தகுந்த அறிவாளிகளாகிய உலமாக்கள் பின்பற்றியிருக்கின்றார்களா? அப்படியுமில்லை இவர்களைப்பற்றி இனி எழுதவேண்டியதில்லை. ஏனெனில், அது உபயோகமற்ற காரியம்பற்றியே. இந்தச்சொல்லப்பட்ட செய்குமார்கள் வயற்றுப் பிழைப்புக்கு இதையொரு தொழிலாய்ச் செய்துவருகின்றார்களென்றே தீர்மானித்தோம். அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் அவரவர்களையே காப்பாற்றி நடந்துகொள்ளவேண்டியது இங்ஙனமாக.

ஆசாரத்துக்குரிய இஸ்லாம் மித்திரர்களே! தன்னையறிகிறதில் மனிதர்கள் எவ்வாறு உண்டாக்கப்பட்டார்கள். அவர்கள் என்னென்ன வஸ்துக்குச் சமானமாயிருந்தார்கள். பின்னே எவ்வாறு அவர்கள் வயதுசென்று முதுமை வந்தற்றபிறகு ஆகிவிடுகிறார்கள் என்பதை முதலாவது ஆலோசித்துப் பாருங்கள். அதைப்பற்றிக் கீழ் கொஞ்சம் விவரிப்போம்.

மனிதர்கள் தாய் வயிற்றிலிருக்கும் போது அவர்கள் தாபர வஸ்துவின் தன்மையாகயிருப்பார்கள். தாயின் வயிற்றிலிருக்கையில் பஞ்சேந்திரியங்களொன்றுக்கும் உணர்வில்லை. பார்வை, கேள்வி முதலிய ஐயறிவுகளொன்றுமிராது, மரம் அதின் வேரைக்கொண்டு ஆகாரத்தை யிழுத்துக்கொள்வதுபோல் தொப்புள் கொடியைக் கொண்டு தாயுடைய சரீரத்திலிருந்து இரத்தத்தை யிழுத்துத் தன் சரீரத்திற் பாய்ச்சித் திரும்பவும் தாயுடைய சரீரத்துக்கு ஓட்டும். இரத்தம் அவளிருதையத்துக்கு வந்தபோது அவள் நுரை யீரலைக்கொண்டு சுவாசிக்கிற காற்றால் சுற்றப்பட்டு மறு

* a அறிவாளி. b மனப்பாடக்காரன். c புத்தி சாலி. d விவேகி. e தெய்வீக ஞானி.

படியும் தொப்புள் வழியே பிள்ளையின் சரீரத்துக்குட் செல்லும். மரத்தின் தன்மையும் இதுபோலவே. மரத்துக்குத் தன் இஷ்டப்படிக்கு ஒரு விடமும் போக அல்லது உசும்பக் கூடாததுபோலவே பிள்ளை அந்த கெர்ப்ப அறையில் நிலைப்பட்டிருக்கும். மரத்தைப்போல் ஐயறிவுயில்லாதது மட்டுமல்ல மரத்துக்குச் சுவாசங் கிடையாததுபோல் தாய் வயிற்றிலிருக்கும்போது சுவாசங்கிடையாது. இவ்விதம் தாய் வயிற்றில் மரஞ்செடியின் தன்மையாயிருந்து பிறந்த உடனே சுவாசமும் ஐயறிவுமுண்டாகிவிடும். பிறந்தநாள்முதல் விவேகமுண்டாகிற வயது வருமளவும் மிருகங்களின் தன்மையா யிருக்கும். யோசனையும் பகுத்தறிவுமிராது அதற்காகத்தான் நமது மார்க்கத்தில் குழந்தைகளுக்கு பகுத்தறிவு அல்லது அக்கில் எனனும் விவேகமுண்டாகும் வரையும் என்ன குற்றஞ்செய்தாலும் அவர்களுக்கு ஆக்கினை யில்லை. ஆனால் புத்தியும் யோசனையு முண்டானதின்பின் மனிதனுடைய தன்மை யுண்டாகின்றது. அதின் குணத்தின் பிரதானமாவது தனனையறிகிறது. ஆனால் தன்னையறிந்து பக்குவவயதைப்பெற்றவுடன் நீங்கள் உங்கள்யோசனையையும்புத்தியையும் சரீர இச்சைகளுக்குரிய தேட்டங்களுக்கே உபயோகமாக்கிக்கொள்ளுகிறீர்கள். மனிதனுக்குத் தனதான குணமாகிய யோசனையைக்கொண்டு விளங்கவேண்டியது தனது உள்ளமையையே - நீங்கள் உலகத்தில் பிறந்திருக்கிறீர்களே எங்கிருந்து வந்தீர்கள்? உங்களுடைய பூர்வீகமென்ன? மனிதன் என்று சொல்வது சரீரத்துக்கா? அல்லது ஆவிக்கா? அல்லது இவைகளன்றி ஆத்துமாவென்றொன்றிருக்கின்றதா? அது கண்டிப்புடையதா? கண்டிப்பல்லாததா? அது எப்படிப்பட்ட பொருள் என்று விளங்கவேண்டும் ஆனால் நீங்கள் கோடிக் கணக்கான மைல் தூலையிலிருக்கிற சந்திரனையும் சூரியனையும் நட்சத்திரங்களையும் ஆராய்கிறீர்கள். பாதாள லோகத்திலுள்ள பொருள்களை விளங்கத் தேடுகிறீர்கள். உங்களை யறியவோ நினைக்கிறீர்களில்லை. உலகமுண்டான காலமுதல் இதுவரையிலுமுள்ள சரித்திரங்களை வாசித்தறிகிறீர்கள். உங்கள் சொந்தச் சரித்திரத்தையோகவனிக்கிறீர்களில்லை. சகல அறிவுகளையும் ஆராய்ந்து திட்டப்படுத்துகிறது ஆன்மா அந்த ஆன்மாவை யறிந்து திட்டப்படுத்துகிறது எல்லா அறிவிலும் பெரிய அறிவென்று யோசிக்கிறீர்களில்லை. இந்த அறிவுக்குள் சகல சாஸ்திரங்களும் அறிவுகளும் அமைந்திருக்கின்றன. நீங்கள் உங்களது சரீரத்துக்குத் தேவையானவைகளைக் கருதுகிறீர்கள். ஆன்மாவுக்குத் தேவையானதைக் கருதுகிறீர்களில்லை. சரீரம் ஆன்மா குடியிருக்கும் கூடென்றும் சரீரம் அழிந்துபோகும் ஆன்மா அழியாதென்றுந் தெரிந்திருக்க அழியாததுடையஇரட்சிப்பைக் கருதாமல் அழிந்துபோகிற சரீரத்துடைய ஈடேற்றையே கருதுகிறீர்கள். இதைப்பற்றிப் பின்னும் பேசுவோம். பகுத்தறிவுண்டான பராயமுதல் முதிய வயதாகும் வரையும் மனிதனுக்கு மானுஷிக தன்மை

யிருக்கும். ஆனால் முதிய வயதான பின் கிரமம் கிரமமாய் வந்தவழியே போகத்தொடங்கிவிடும். அவக்கமாய் புத்தி மழுங்கி ஞாபகங்குறைந்து வரும் யோசனையற்று பாலரைப்போலாகிவிடுவார்கள். குழந்தைகள் எழும்பி நடப்பதற்குத் தடுமாறுவதுபோல் உதவியில்லாமல் நடக்கக் கூடாதவர்களாகி விடுவார்கள் அதன் பின் தாபர வஸ்துவின் தன்மை நெருங்கும் பஞ்சேந்திரியங்களும் மழுங்கிவிடும் பார்வை குறைந்துவிடும் கேள்வியற்றுப் போகும் இரசந் தெரியாது தொட்டறிவு மற்றுப்போகும் பாலரைப்போல் பெலனற்று பிறர் உதவி பெற்று சீவன் பதைத்துக் கொண்டிருக்கும் அந்த நேரத்தில் தாபர வஸ்தின் தன்மைக்கு வித்தியாசமாக சுவாச மொன்றுமட்டுந் தானிருக்கும் அந்தச் சுவாசமும் பின்னாற் போய்விடும் சுவாசம் போனதின்பின் சொற்ப நேரம் உயிர் உடலில் நிற்கும் ஹிருதயத்தில் இரத்த மோடிக்கொண்டிருக்கும் வரையும் தாபர வஸ்துவின் தன்மை பூரணமாகிவிடும் தாயுடைய வயிற்றில் இந்திரியந் தரித்து அது உறுப்புகளில்லாமல் சதைக்கட்டியாயிருக்கும் போது சிறிதாய் ஹிருதயமுண்டாகி அதில் இரத்த மோடிக்கொண்டிருக்கும் அதைப்போலவே மரண நேரம் மற்ற உறுப்புகளெல்லாம் உயிரிழந்து சுவாசமும் போனபின் தாய் வயிற்றில் சதைக் கட்டியாய் உறுப்புகளும் சுவாசமுமில்லாமலிருந்த வேளையில் இரத்தமோடிப் பதைத்துக்கொண்டபடியே சில நேரமிருந்து உயிரற்றுப் போகும்.

மேலே எழுதியிருப்பதைக் கவனித்தால் மனிதன் தாய் வயிற்றில் உண்டான காலமுதல் அவன் இறக்கும் வரையும் அவனுடைய தன்மை பேதகப்பட்டு வரும் விதத்தை விளங்குவீர்கள்.

இன்னும் வரும்.

## பூகம்பம்.

[சென்ற 20 மிலக்கம் 161 ம் பக்கத் தொடர்ச்சி]

அறபிகள் "ஸால்ஸலத்து" என்று பூகம்பத்துக்குப் பெயர் சொல்வார்கள்.

பூகம்பத்தைப்பற்றி அறபு பூகோள சாஸ்திர பண்டிதர்களிற் சிலர் ஐரோப்பிய பண்டிதர்கள் சொல்வது போல பூமியின் கீழ் அதி உஷ்ண முண்டாயிருக்கிறதென்றும் அந்த உஷ்ணம் அதிகப்படுவதால் பூமியில் இருக்கிற சில பதார்த்தங்களில் தாவி அவை அசையப் பூமியின் அப்பாகம் அசைகிறதென்றுஞ் சொல்லுகின்றார்கள். அறபு வைதீக சாஸ்திர பண்டிதர்களில் சிலர் பூமி தண்ணீரிலிருக்கிறதென்றும், தண்ணீர் ஒரு கல்லிலும், கல் ஒரு இடபத்திலும், இடபம் ஒரு மணல் மேட்டிலும், மணல் மேடு ஒரு மீனுடைய முதுகுச் சிறகிலும், மீன் காற்றிலும், காற்று இருளாகிய திரையிலும், இருள் பெயர்ந்தும் ஒரு மணலிலும் தரிபட்டிருக்கிறது. அதற்கப்பாலுள்ள சங்கதி மனிதனுக்கு

விளங்காது. சொல்லப்பட்ட மீன் தன்னுடைய முதுகுச்சிறகை அசைக்கும்வேளையில் பூமியில் சில பாகங்களில் கம்பமுண்டாகிறதென்று சொல்லுகின்றார்கள்.

பூமி அசைகிறதும், பாதாளம் வரையில் இறங்கிவிடுகிறதும். கடல் நீர்ப்பெருகிப் பூமியின் தீவுகளை விழுங்கிறதும், சூரியனில் கிரணம்போன்ற நாதன மறைவுகளுண்டாகிறதும், நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுகிறதும், மலைகள் கருகிச் சாய்ந்து விழுகிறதும், கன்மலைகள் கடல் முதலியவை யெரிகிறதும், உயிர்ப்பிராணிகள் ஒன்றையொன்று பழிவாங்கிறதும், இவ்வுலகமுடிவுநாள் சமீபிக்கிற அடையாள கருமங்களா யிருக்கின்றன. இவைகளைப்பற்றிய அந்தரங்க விஷயங்களை ஞானுந்த வேதாந்த நிபுணர்கள் பலவிதமாகக் கூறியிருக்கின்றார்கள். அவைகளை நாம் இங்கே விவரிக்கிறதாயிருந்தால் சங்கதி நீண்டுவிடும் சகல அற்புதங்களும் நாயனுடைய மகத்துவத்தையும் அவனுடைய கற்பனையையும் வெளியாக்குகின்றன. ஆகையால் அவனுடைய படைப்புகளில் ஒன்றாகிய பூமியில் எத்தனையோ அதிசயங்கள் ஒவ்வொரு காலங்களிலும் வெளியாகி வருகின்றன. இந்தப் பூமியை அல்லாஹுத்தஆலா அற்புத படைப்பாகப் படைத்திருக்கின்றான்

இந்தப் பூமியை முதலாம் பூமியென்று சொல்லப்படுகின்றது. இது படைக்கப்பட்ட தொடக்கத்தில் பாலிலும் வெள்ளையாகவும், கஸ்தூரியிலும் வாசமாகவும் இருந்தது. அல்லாஹுத்தஆலா ஆதம்நபியைப்படைத்துஅவர்கள் சுவர்க்கத்தில்விலக்கப்பட்டமரத்தின்கனியை ஹவ்வா நாயகின்வேண்டுகோளால் தேவ கற்பனை மீறித்தின்றமையால், நாயன் கட்டளைப்படி தேவ தூதர்களால் இப்பூமியில் இறக்கப்பட்டார்கள். அவர்களை யிறக்கப்படவே, இப்பூமியில் அவர்கள் வாசஞ்செய்ததின் பிறகு அது புழுதியாக மாறிவிட்டது. இந்தப்பூமியின் முக்கால் வாசியைக் கடல் வளைந்து கொண்டது. கால்வாசிதான் மிஞ்சியிருக்கிறது. இந்தக்கால்வாசியில் முக்கால்பங்கு மனுஷ சஞ்சாரமின்றிப் பாழா யிருக்கிறது. முன் சொன்ன கால்வாசியையுந்தான், சகல அரசர்களும் ஆட்சிசெய்து வருகின்றார்கள். பூமி சாஸ்திரத்தில் சொல்லப்படுகிற விசாலம் கடல் கொண்டுபோய் மீதிப்பட்டதாகவே இக்கணக்குப்படி தெரிகிறது இந்த விஷயங்களை இப்போது நாம் எழுதவில்லை, பூமிகளைக் குறித்து எழுதும்போது அதுகளைப்பற்றிப் பேசுவோம். பூமி தண்ணீரின்மேல் இருப்பதால் அசைவற்றிருக்கமுடியாது. அது தண்ணீருக்குமேலும், தண்ணீரால் சூழ்ந்துமிருப்பதால் அசைவுண்டாகின்றன. அசைந்து இருமிக்க நாசமடையாது பருவதங்களை ஆதாரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அல்லாஹுத்தஆலாவின் ஏவல் வரும் வரையில் ஒன்றையொன்று காப்பாற்றிக்கொண்டு நிற்கிறது, பூகம்பத்தின் அந்தரங்க சங்கதியை மட்டுமே சொல்லக்கூடாது. வெளியான விஷயங்களையே சுருக்க

மாயெழுதினோம். இனி இதை இத்தமட்டில் நிறுத்துகிறோம்.

# இமாம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஹ் அவர்கள் சரித்திரம்.

[சென்ற 20 மிலக்கம் 164 ம் பக்கத் தொடர்ச்சி]

அந்தப் பொன்னாகச் சமைந்த கல்லானது ஐம்பது பாரந் தங்கமாக விருந்தது. அப்போது சாதுலி றஹ்மஹுல்லாஹ் அவர்கள் மிஸ்று ராஜ தூதர்களைப் பார்த்து, உங்கள் அரசனின் பொக்கிஷதாரியானவர் நம்மிடம் வந்ததில் கெட்டுப்போனாரோ? இருந்துவிட்டாரோ? பாருங்கள், ஆகவே, இந்த தங்கமெல்லாங் கொண்டுபோய் இராஜ பொக்கிஷத்தில் போட்டு, அதை சுல்தானுக்கு இனாமாக எடுத்துக்கொள்ளச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். சாதுலி ஆண்டவர்களின் உத்தரவுப் பிரகாரம் தூதர்கள் அந்தப் பொன்னெல்லாங் கொண்டுபோய் திரசூரி என்னும் பணச்சாலையில் சேர்த்ததுமல்லால், சாதுலி ஆண்டவர்கள் செய்த அற்புதத்தையும் இனாமாக அவர்கள் கொடுக்கச்சொன்னதையும் அறிவித்தார்கள். இச்சங்கதியைக்கேட்டு சுல்தான் ஆச்சரியப்பட்டு, உடனே பரிவார சகிதராகப் புறப்பட்டு இஸ்கந்தரிய்யாப் பட்டணத்துக்குவந்தார். அங்கே வந்து குத்பு நாயகம் அவர்களின் திருச்சமுகஞ்சென்று தாம் எண்ணிய கெட்ட எண்ணங்களையெல்லாம் விட்டொழிந்தவராய் சாதுலி நாயகத்தின் பாத தாமரையில் பணிந்து தெண்டனிட்டு மிக்க அஞ்சிப் பயந்து வணக்கமாய் நின்றார். இதைக்கண்ட நாயகம், அவ்விராசனையும் மந்திரி முதலாயவர்களையும் அன்பாகக் கிருபானோக்கமாக உட்காரும்படி உத்தரவு செய்தார்கள். அவர்களின் உத்தரவுப்படி உட்கார்ந்ததின்மேல், குத்பு நாயகத்தை விளித்து நாயகமே என்னை மன்னிப்பீர்களாக, எனது மந்திரியாகிய தங்கள் சிஷரில் ஒருவரான முஹம்மது இப்னு கலாவூன் என்பவர் கல்லில் ஜலபாதைக்கிருக்கத்தாங்கள் முன் உத்தரவு செய்தீர்கள் அதனால் அது பொன்னாய்விட்டது. அது விஷயம் என்னையும் என் அரசாங்கத்தவரையும் ஆச்சரியத்தி லாழ்த்திவிட்டது ஆகையால், இப்போது அந்த முஹம்மதுப்னு கலாவூன் என்பவரை நான் காட்டுங் கல்லில் நீருக்கிருந்து அதையும் பொன்னாக்கித்தரும்படி தாங்கள் உத்தரவுசெய்வதைத் தேடுகிறேன் என்றார். அதற்கு ஓய்! சுல்தானே! முன்னே கல்லுப் பொன்னாய்ச் சமைந்தது வல்ல நாயகனாகிய அல்லாஹுத்தஆலாவின் கற்பனைப் பிரகாரம் கொடுக்கப்பட்ட உத்தரவினாலேயே. ஆனால் இப்போது உமது காட்டப்படி உத்தரவு கொடுக்க அந்த ஆண்டவன் எனக்கு உத்தரவுகொடுக்கவில்லை. ஆகையால் அப்படிச்செ

ய்யக் கூடாதென்று விலக்கினார்கள். சாதுலி ஆண்டவர்களின் சொல்லைக் கேட்டு சுல்த்தான் முதலிய பிரஜைகள் யாவரும் தலைசாய்த்து வணக்கமாயிருந்தார்கள். சுல்த்தான் நாயகம் அவர்களை கண்டுசந்திக்கிறதற்காக வந்தபோது, காணிக்கையாகக் கொடுக்கும்படி தயனூருக் கருமையும் பிறவூருக்குப் பெருமையும் ஆகிய சிலவிலைபெற்ற பொருட்களும் தங்க நாணயங்களும் கொண்டுவந் திருந்தார்கள். அவைகளையெல்லாம் சாதுலி நாயகம் அங்கீகாரஞ் செய்தார்களில்லை. அல்லாஹுத்தஆலாவின் உதவி கொண்டு தமது பணிவிடைக்காரனை நோக்கி ஒரு கல்லைக்காட்டி அதில் நீருக்கிருக்கச் சொல்ல, அது தங்கமாய்ச் சமையும்படி அதிகாரமுடையவர் மனுஷர்களிடத்தில் ஒரு வஸ்துவையும் பெற்றுக்கொள்ள தேவைப்படமாட்டார் என்று சொல்லி இராசனால் கொண்டுவரப்பட்ட பொருட்களை அவருக்கே எடுத்துப்போகும்படி ஆக்கியாபித்தார்கள். மிஸ்று ராசன் சில நேரம் நாயகத்தின் திருச்சபையிலுட்கார்ந் திருந்ததுமல்லாமல், நாயகம் முன்னே தமக்கு மகுறிபு தேசத்து சுல்த்தானிடத்தால் கண்மூடி விழிக்குமுன்னர் கடிதம் அழைப்பித்துக்கொடுத்ததையும், இப்போது கருங்கல்லை தங்கமாக்கினதையும், இவை போன்ற ஆச்சரியங்களைக்கண்டு அவவாச்சரியத்தினால் வியப்படைந்து, அல்லாஹ்வைப்புகழ்ந்து துதித்தவராயே மூந்துநாயகத்தின் திருப்பாதம் பணிந்து விடை பெற்றுக்கொண்டு தமது பரிவாரங்களோடு ஊர் போய்ச்சேர்ந்தார்.

குத்பு நாயகம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஹ் அவர்கள், இஸ்கந்தரிய்யாப் பட்டணத்தில் சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு, அவ்விடத்தால் நீங்கி, வேறு பல பட்டணங்களையும் சிற்றூர்களையும் தெரிசித்தவர்களாய்த் தேச சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்தார்கள். சர்க்குரு நாயகம் அவர்கள் பிரயாணப்படுகிற பகுதிகளுக்கெல்லாம் அனேகமாக அவர்களின் சிஷ்யர்களும் பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்களின் சிஷ்யர்களில் ஏறத்தாள இருபதினாயிரம் பேர்கள் அல்லது பதினாயிரம் பேர்கள் மட்டில் எவவேளையும் நாயகத்தைப் பின்பற்றிக்கொண்டிருப்பார்கள். இவர்களின் ஊண் தீன் உடை முதலியயாவும் சாதுலி ஆண்டவர்களின் பொறுப்பால் கொடுக்கப்பட்டு சவரட்சணை செய்யப்பட்டு வந்தது. ஆயிரம் பதினாயிரம் பேர்களுக்கு சவரட்சணை செய்கிறதென்றால் ஒரு இலகுவான காரியமா? எவ்வளவு பணச் செலவுகளுண்டாகும்! ஆ! ஸுப்ஹானல்லாஹ்!! (அல்லாஹ்வைத் துதிக்கிறேன்) அவனுடைய வல்லபந் தங்கிய மகாத்துமாவாகிய குத்பிய்யத்தை பெற்ற இந்நாயகத்தின் தகுதியையும் மகத்துவத்தையுங் காரண அதிஜயத்தையும் இந்த ஒரு விஷயத்திலே மூளையை உடையவர்கள் விளங்குவார்கள். குத்பு சாதுலி ஆண்டவர்களுடைய காலத்தில் மகுறிபு, சாம், எமன், அரபு, அஜமாகிய தேசங்களிலெல்லாம் அவர்

களின் சீஷர்களை பரம்பியிருக்கின்றார்கள். அவர்கள் ஒரு கோணத்திலிருந்து கூப்பிடுவார்களேயானால் மறுகோணம் வரையில் லட்சக்கணக்கான முரீதீன் (சீஷர்) கள் அக்கூப்பிடுதலுக்கு ஜவாபு கொடுப்பார்கள்.

இன்னும் வரும்.

## மாதர் வித்தை.

மாதர்களுக்கு வித்தையென்னுங் கல்வி ஆவசியகம் என்பதற்குப் பல நியாயமுண்டு. அவர்களுக்கு அதிக மேலான வித்வ சாஸ்திரங்கள் விசேஷ அவசரமல்லாதுபோனாலும் நல்லொழுக்கத்துக்குத்தக்க கல்விகளையும் வேதானுசாரங்களையும் ஞானத்தை வெளியாக்கிற சகிர்த கல்விகளையும் அவர்கள் படிக்கவேண்டியது முக்கியமல்லவா? ஏனானால் தாய்மார்கள் தானே தங்கள் பிள்ளைகளுக்கு முலைப் பாலோடே ஞானப்பாலூட்ட வேண்டும். அவர்கள் தானே சிறுபருவந் துவங்கி அவர்களை நல்லொழுக்கத்திற் குட்படுத்தவேணும். அவர்களுக்குக் கல்வியில்லாமற்போனால் தங்கள் பிள்ளைகளுக்கு என்னமாய்ப் படிப்பிப்பார்கள். அவர்களை எப்படி நல்லொழுக்கத்துக் குட்படுத்துவார்கள். வீட்டெசமாட்டி தங்கள் வீட்டுப் பெண்களையும் சிறியோர்களையும் வீட்டுக்காரியங்களையும் செவ்வையாய் நடத்தவேணும். அதெல்லாவற்றிற்கும் புத்தி விவேகமும் ஞானமுந் திறமையும் வேண்டியதல்லவா? கல்வியில்லாவிட்டால் இக்காரியங்களையவர்கள் எவ்விதம் நடத்தக்கூடும் மூடப் பெண்களால் தங்கள் பிள்ளைகளும் கெட்டுப்போகுமென்பது "உள்ளங்கை நெல்லிக்கனிபோல்" காணக்கிடக்கின்றது. ஏனானால் வீட்டில் தாய்மார்களால் நடைபெறும் கோபக் குணத்தையும் பொய் சொல்லுவதையும் பின் புறணி கூறுவதையும் துர் வழக்கங்களையும் பட்சமின்மையுங் கண்டால் இக்குணங்களெல்லாம் அவர்களிடத்திலும் வளர்ந்து வரும் பிள்ளைகள் மூலமாய் பெற்றோர்களின் சீவியத்தைக் கண்டுகொள்ளலாம் என்பது உண்மையல்லவா? "கேடில் விழுஞ்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றையவை," என்று கல்வியைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. பெற்றோர் எல்லோரும் அதிக சீமான்களாய் இருக்கிறதில்லை. ஆனால் விலையுயர்ந்த இரத்தினக் கற்களைப் பார்க்கிலும் அதிகமாய் மதிக்கப்படக்கூடிய நற்குண நற்செய்கைகளைத் தங்கள் பிள்ளைகளுக்குப் பின் வைத்துப்போக வேண்டியவர்களாயிருப்பதாலும் தாய்மார்களுக்குப் படிப்பினை மிக்க அவசியமேயாம். கற்பென்பதற்குக் கல்வி எனப் பொருள்படுவதால் பெண்களுக்குக் கற்பு எவ்வித அவசரமோ வித்தையு மவ்விதமாகும்.